**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,சிங்கம்புணரி**

முன்னிலை: திருமதி G. அபர்ணா M.A.,LLM.,B.Sc.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், சிங்கம்புணரி

2026– ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ம் நாள் செவ்வாய்கிழமை

**Crl.M.P. No.69/2026**

*****

செல்வமணி, த/பெ.குமார் ... மனுதாரர்/எதிரி

/எதிர்/

அரசுக்காக: சார்பு ஆய்வாளர்,
புழுதிப்பட்டி காவல் நிலைய
குற்ற எண். 75/2025 ... எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்
பிரிவுகள் 303(2) பா.கு.ம.பா.சட்டம்

இம்மனு 07.03.2026 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டது. மனுதாரர்/எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.திருசக்தி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், இம்மனு இறுதி விசாரணைக்காக வந்தபோது இருதரப்பு வாதங்களை கேட்டும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

<u>உத்தரவு</u>

1. மனுதாரர்/எதிரி தரப்பில் மனுதாரர்கள் மீது இந்நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட Crl.M.P.No.38/2026, நாள்:03.02.2026–ல் பிறப்பிக்கப்பட்ட நிபந்தனை உத்தரவை முழுவதுமாக ரத்து செய்யகோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிர்மனுதாரர்க்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டு பதில் பெறப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பு பதில் அறிவிப்பில், மனுதாரர்/எதிரி புழுதிப்பட்டி காவல்நிலையத்தில் 08.01.2026–ம் தேதியிலிருந்து இன்று வரை முதல் தினமும்

காலை 10.00 மணிக்கு நேரில் ஆஜராகி கையொப்பமிட்டு வருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

3. கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனையில் இருந்து மனுதாரர்/எதிரி இந்நீதிமன்ற நிபந்தனை படி கடந்த 08.01.2026–ம் தேதி முதல் இன்று வரை தினமும் காலை 10.00 மணிக்கு புழுதிப்பட்டி காவல் நிலையத்தில் ஆஜராகி கையொப்பம் செய்துள்ளனர் என்பது தெரிய வருகிறது. எனவே வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும், மனுதாரர்/எதிரி தரப்பு வேண்டுகோளை கருத்தில் கொண்டும் மனுதாரர்/எதிரி மீது விதிக்கப்பட்ட நிபந்தனை உத்தரவை தளர்த்தி உத்தரவிடுவது தான் நீதியின்பால் உகந்ததாக அமையும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

4. எனவே இம்மனுவானது அனுமதித்து **நிபந்தனை உத்தரவினை முழுவதும் தளர்த்தி** உத்தரவிடப்படுகிறது.

*இந்த உத்தரவு என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்து, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 10–ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.*

/உண்மை நகல்/

(ஒம்/–ஜி.அபர்ணா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி